## இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் - 2017

இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவு மற்றும் 1974 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 124/6 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்வதைப் போன்றே நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தலும் கணக்காய்வில் உள்ளடங்கும். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்கள் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஜப்பான் அரசிடமிருந்து நன்கொடையாக தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு செய்வதற்கான ஆறு உபகரணங்களை துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் கட்டணமான ரூபா 359,248 தொகை அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் நிலையத்தினால் செலவிடப்பட்டிருந்ததுடன் அது பெற வேண்டிய தொகையாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஆராய்ச்சி மேம்படுத்தல் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தால் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட 04 வணிக செயற்திட்டங்களின் வழுக்களின் மேவுகைக் காலம் 2018 யூலை கணக்காய்வுத் திகதியளவில் முடிவடைந்திருந்த போதிலும், ரூபா 482,122 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்பட்ட 04 செயற்திட்டங்களுக்குரிய 24 மாதம் முதல் 18 மாத காலமாகக் கொண்டு வரப்படுகின்ற கிடைக்க வேண்டிய ரூபா 970,622 தொகை 2018 ஒக்தோபர் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையத்தின் நிதி வளைவுகள் ரூபா 5,129,045 தொகையான பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,182,265 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 946,780 இனால் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரச மானியம் ரூபா 28,014,850 இனாலும் பிறபோட்ட வருமானம் ரூபா 3,985,412 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், நிர்வாகச் செலவினம் ரூபா 19,539,409 இனால் அதிகரித்தமை, ஏனைய செலவினம் ரூபா 6,338,438

இனால் அதிகரித்தமை, பெறுமானத்தேய்வு ரூபா 2,875,302 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 4,241,487 இனால் குறைவடைந்தமை என்பன இப்பற்றாக்குறை அதிகரிப்பதற்கு முக்கியமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 28,114,860 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டு அளவில் ரூபா 2,238,655 தொகை வரை குறைந்திருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது அது ரூபா 5,129,045 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கல் செய்யும் போது 2013 ஆண்டின் போது ரூபா 191,433,742 தொகையான நிலையத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 272,949,075 தொகையாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 4.1 செயலாற்றல்

------------------------

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவினங்களில் சிக்கனமான கட்டிட தொழில்நுட்பம் தொடர்பாக தெளிவுபடுத்தும் 04 நிகழ்ச்சித் திட்டங்களும், 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு 253 பேர் பங்குபற்றியிருந்தனர். 14 பேர்களுக்காக இந்த தொழில்நுட்பத்தை கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உரிய தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக 03 நபர்களுக்காக மாத்திரமே கவனஞ் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடாத்தப்பட்ட தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிலையம் அறிமுகப்படுத்திய 21 தொழில்நுட்பங்களிலில் இருந்து 55 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 09 தொழில்நுட்பங்களில் இருந்து 23 அனுமதிப்பத்திரங்களை மாத்திரமே வழங்கக் கூடியதாக இருந்தது. அந்த தொழில்நுட்பங்களில் 08 தொழில்நுட்பம் 2008 - 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது நிலையத்தால் அறிகப்படுத்தப்பட்டிருந்த தொழில்நுட்பமாக இருந்ததுடன் 2013 - 2017 காலப்பகுதியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 - 2017 காலத்திற்குரியதாக நிலையத்தால் தொழில்நுட்பம் மற்றும் 20 தொழில்நுட்ப உபகரணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 14,992,213 கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தொழில்நுட்ப கையளித்தல் (Technology Transfers) ரூபா 312,102 கிரயமான 02 தொழில்நுட்பங்களை மாத்திரமே கையளிக்கக்கூடியதாக இருந்தது. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மற்றைய 18 தொழில்நுட்பங்களில் எதுவும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமூகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 100 அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், புதுப்பிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 46 ஆகும். அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பம் தொடர்பாக தொழில்முயற்சியாளர்களிடமிருந்து ஆர்வமொன்று காணப்படாமையினால் இலக்கிடப்பட்ட மட்டத்தில் புதிய அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிலையத்தின்

தொழில்நுட்பம் தொடர்பாக பொதுமக்களுக்கிடையே நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் வழக்கிழப்பு ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் விளம்பர நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் நிலையம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) 2013 - 2017 காலப்பகுதியின் போது நிலையத்தினால் 20 தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பேடன்ட் அனுமதிப்பத்திரத்திற்காக நான்கு தொழில் நுட்பங்களுக்காக மாத்திரமே கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண சபை, கடற்றொழில் மற்றும் கால்நடை உற்பத்தி அமைச்சுக்காக குளங்களில் நீர்த் தாவரங்களை வெட்டி அகற்றும் இயந்திரமொன்று ஈடுபடுத்தும் செயற்திட்டமொன்று 2016 யூன் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சினால் அவ்வவ்போது இந்த இயந்திரத்தின் ஆகக் கூடிய தேவையினைக் காண்பித்து ஆராய்ச்சி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு கோரப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை 03 சந்தர்ப்பங்களின் போது திகதி நீடிக்கப்பட்டிருந்த போதும் இயந்திரத்தை ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. செயற்திட்டத்திற்காக ரூபா 368,364 கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

(எ) சுயமாக யோகட் நிரப்புதல் மற்றும் முத்திரையிடல் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 560,000 ஆகக் காணப்பட்டது. உரிய காலஎல்லையில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக செயற்திட்டக் காலம் 2018 பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் ரூபா 576,247 கிரயமொன்றைச் செய்திருந்த போதிலும், இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேங்காய் துருவலை பயன்படுத்தி உயர் தரத்துடன் உள்ள தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்ளும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தின் பிரகாரம் மாதிரி இயந்திரமொன்றை அமைத்து அதனைப் பரீட்சித்து அபிவிருத்தி செய்து இறுதியில் அவ்வாறான 04 இயந்திரங்களை உற்பத்தி செய்தல் நிலையத்தின் பணிப்பொறுப்பாக இருந்தது. மாதிரி இயந்திரம் மற்றும் இன்னுமொரு இயந்திரத்தை அமைப்பதற்காக ரூபா 2,240,104 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரம் தொடர்பாக வெப்பக் கட்டுப்பாட்டு முறைமையில் பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் மூலப்பொருட்கள் உரியவாறு உள்ளீடு செய்யப்பட்டது முதல் வெளியே வராதவைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்காக சரியான தீர்வொன்று பயன்படுத்தப்படவில்லை. செயற்திட்டத்திற்குரியதாக 04 இயந்திரங்கள் அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு இயந்திரம் மாத்திரம் அமைக்கப்பட்டமையின் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 313,572 கிரயமான 02 செயற்திட்டங்களின் ஆராய்ச்சி சந்தர்ப்பங்களின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளின் காரணமாக வெற்றியடையாதிருந்ததுடன் அந்தக் குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக பொருத்தமான தொழில்நுட்ப முறைமையைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் அனேக சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 2014 - 2016 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 20 செயற்திட்டங்கள் 02 மாதம் முதல் 24 மாதம் வரையிலான காலத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உரிய கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கு தவறியமையின் காரணமாக 06 மாதம் முதல் 31 மாதம் வரையிலான காலத்தால் திகதி நீடிக்கப்பட்டிருந்தது. திட்டமிடலில் குறைபாடுகள் காணப்பட்டமை, வெளித்தரப்பினர்களுடன் முறையான பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமை மற்றும் செயற்திட்டத்தை செய்துகொண்டிருக்கும் போது இருதரப்பினரிடையே ஏற்படுகின்ற பிணக்குகளின் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தது.

(இ) கை இயந்திர கைத்தொழிலுக்கு தேவையான துணிகளைப் பரிசோதனை செய்யும் இயந்திரமொன்றை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2015 திசெம்பர் 08 ஆந் திகதி ஆரும்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் முதலாவது கட்டமாக ரூபா 840,950 பெறுமதியான இயந்திரமொன்று உற்பத்தி செய்யப்பட்டு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி கைத்தொழில் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இயந்திரத்தில் அவ்வவ்போது ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் 06 சந்தர்ப்பங்களில் கைத்தொழில் திணைக்களத்தால் நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், இயந்திரம் செயற்படுத்த முடியுமான நிலைக்கு உட்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் II ஆம் கட்டத்தின் போது இந்த இயந்திரத்தினை மேம்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(ஈ) குருணாகல் மாநகர சபைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 5,690,000 தொகையான உயர் தொழில்நுட்பத்துடன் உள்ள புதிய சுடலைக் கூடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்று 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 மார்ச் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டக்காலம் 2018 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் ரூபா 4,766,748 தொகை இதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) காலி வக்கல் மோதர மற்றும் பெந்தர நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் வாய்க்கால் மேல் வரும் நீரை கரைக்கு வருவதை கட்டுப்படுத்துவதற்கான நிலையம் விவசாய அபிவிருத்தி திணைக்களத்துடனும் கமநல அபிவிருத்தி திணைக்களத்துடனும் ஒன்றிணைந்து 2014 ஆம் ஆண்டின் போது இரண்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் இரண்டு செயற்திட்டங்களுக்காக ரூபா 218,108 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இரு தரப்பினர்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டமை, முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமை போன்ற காரணங்களினால் செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

**4.3 இனங்காணப்பட்ட நட்டம்**

2015 - 2017 ஆம் காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட 10 வணிக செயற்திட்டங்களில் வருமானத்திற்கு அதிக செலவினமொன்று செய்ய வேண்டி ஏற்பட்ட காரணத்தினால் ரூபா 2,771,188 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 5 நிலைபேறான அபிவிருத்தி

### 5.1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட பிரகாரம் அறிந்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய கட்டங்களுக்கும், இலக்குகளை அடையப்பட்டமையை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலக்குகள் அடையப்பட்டமையை அளவீடு செய்வதற்கான சரியான தரவு அடிப்படையை உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான நிதிஏற்பாடு, பயிற்சி பெற்ற ஊழியர்கள் அல்லது பௌதீக வசதிகள் தேவை என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) இன் பிரகாரம் பெறுகை நடைமுறையில் ஒவ்வொரு கட்டிடத்திற்கான காலத்தைக் காண்பிக்கும் வகையில் வரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தால் குறைந்த செலவில் நிர்மாணத் தொழில்நுட்பமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது அலுவலகத்தின் முன்பக்க தொகுதியை நவீனமயப்படுத்தும் (Rehabilitation of Front Office Building) ஒப்பந்தம் ரூபா 7,868,607 ஒப்பந்தப் பெறுமதியில் வெளி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் முகாமைத்துவம் | வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தும் போது தாமதம் காணப்பட்டமை. |
| (ஆ) பெறுகை முகாமைத்துவம் | (i) பொருட்கள் நிலையத்திற்கு கிடைத்த பின்னர் செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கு முன்னர் பொருட்களை சரியான பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றமைக்கான சிபாரிசு பெறப்படாமை. |
| | | (iii) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை திகதியின்றி வழங்கப்பட்டிருந்தமை. |
| | | (iv) | பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| | | (v) | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்திற்கும் உள்ளபடியான கிரயத்திற்கும் இடையே பாரிய முரண்கள் காணப்பட்டமை. |
| | | (vi) | பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் பொருட்களை வழங்குவதற்காக நீண்ட காலம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பம் காணப்பட்டமை |
| | | (vii) | கேள்வி திறக்கும் போது கேள்வி திறத்தில் குழு அறிக்கைகளில் சகல அங்கத்தவர்களும் கையொப்பமிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (இ) | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| | | (ii) | நேர்முகப் பரீட்சை பதிவேடுகளில் சகல உத்தியோகத்தர்களும் கையொப்பமிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | செயற்திட்ட முகாமைத்துவம் | (i) | செயற்திட்ட காலத்தை நீடிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது அதற்கான காரணங்கள் காண்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை |
| | | (ii) | செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன் முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |